ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2456/78 - 2025 ඔක්තෝබර් මස 04 වැනි සෙනසුරාදා - 2025.10.04

2456/78 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: RUW/LAN/ACQTN/A2/264.
காணி அமைச்சின் இல.: 4-3/18/2021/WS/238.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

ருவன்வெல்ல நீர் விநியோகத் திட்டத்தின் கீழ் நீர் களஞ்சியப்படுத்துவதற்கான தாங்கியை நிர்மாணிப்பதற்காக காணித் துண்டொன்றை எடுத்தல்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் ருவன்வல்லை பிரதேச செயலாளர் பிரிவில் தெஹிகம்பல் கோரளை இலக்கம் 104 B, மாஹல்ல கிராம அலுவலர் பிரிவில் தெவெக்கந்த கிராமத்தினுள் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் கடத்திரல் வரைபடத்தில் 610445 ஆம் இலக்க, வலய இலக்கம் 05, பத்திர இலக்கம் 01 மற்றும் 2025.08.06 ஆந் திகதிய வரைபடத்தில் விபரமாகக் காட்டப் பட்டுள்ள 0.1012 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள காணியின் விபரங்கள் பின்வருமாறு:

**01. துண்டு இல. 01**

காணியின் பெயர்: ருவன்வல்லை வத்த; ஆரம்ப உரிமை கோருபவர்: வரையறுக்கப்பட்ட மல்வத்த வெலி பெருந்தோட்டக் கம்பனி; விஸ்தீரணம்: 0.1012 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு ருவன்வல்லை பிரதேச செயலாளர் அலுவல கத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத் தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். டி. எஸ். என். ஹெட்டிகே,
பிரதேச செயலாளர்,
ருவன்வல்லை.

பிரதேச செயலகம்,
ருவன்வல்லை,
2025, செத்தெம்பர் 30.

EOG 10 - 0054

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.